1990 ஏப்ரல் 10]

(ஆ) வருவாய்த் துறை அலுவலர்கள் வேலை நிறுத்தத்தால் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்து.

திரு. கே. ரமணி: மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு வருவாய்த் துறை ஊழியர்களுடைய போராட்டம் 20 நாட்களுக்கு மேலாக நடை பெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை தாங்கள் அறிவீர்கள். இந்தப் போராட்டத்தின் விளைவாக அரசுக்கும் ஊழியர்களுக்கும் மக்களுக்கும் கஷ்டங்கள் ஏற்படுகிறது என்பதும் ஒரு உண்மை. நாமெல்லாம் அறிந்த உண்மை.

10–05 மணி

அந்தப் பேச்சுவார்த்தைக்கு அவர்களைக் கூப்பிட்டுப் பேச வேண்டும் என்று பல தடவை நாங்களும், குறிப்பாக நானும், நமது வருவாய்த் துறை அமைச்சர் அவர்களிடத்திலே வேண்டிக் கொண்டோம். அவரும் பேச்சு வார்த்தையை ஆரம்பித்து, 2 தடவை பேச்சு வார்த்தை நடந்தது. திடீரென்று ஸ்டிரைக்கைக் கைவிட்டால்தான் பேச்சு வார்த்தை என்ற ஒரு நிலை துரதிர்ஷ்டவசமாக ஏற்பட்டு, அதன் விளைவாக அந்தப் பேச்சு வார்த்தை நின்று போய் விட்டது. உடனடியாக அவர்களைக் கூப்பிட்டு வைத்துப் பேசினால், நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதில் ஆழமாகத் தலையிட்டுப் பேசினால் தீர்க்க முடியாத பெரும்—தாண்ட முடியாத மலைகள் இருப்பதாக எனக்குப் படவில்லை, எனவே அப்படிப்பட்ட ஒரு அணுகு முறையோடு, அவருடைய இலாக்கா, அவருக்குக் கீழே இருக்கின்ற ஊழியர்கள், அவர்களை எந்த நேரத்திலும் அவர்கள் கூப்பிட்டு வைத்துப் பேசுவதற்கு சகல உரிமைகளும் உண்டு, செய்யவும் முடியும். அந்த முறையில் இனி இப்படிப்பட்ட ஒரு சஸ்பென்ஸ் நிலைமையை நீடிக்காமல் அவர்களை உடனே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தயவு கூர்ந்து கூப்பிட்டுப் பேசி ஒரு முடிவைக் காண்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்த வருவாய்த் துறை பிரச்சினைக்காக நேற்று முன் தினம் 78-வது விதியின் கீழ் ஒரு விவாதத்தை எழுப்ப வேண்டும் என்று உங்களுக்கு எழுதிக் கொடுத்திருக்கிறேன். ஆனால் இன்றைக்கு எதிர் பாராத விதமாக இதை அனுமதித்ததற்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்கு அந்தப் போராட்டம் ஒரு வலுவான சூழ்நிலைகள் ஏற்பட்டு, மறியல் என்ற அளவிற்கு ஆகி, கைது செய்யப்படுகிற நிலைமைகள் ஏற்பட்டு, அவர்கள் காவல் துறையினாலே கொடுமைப் படுத்தப்படுகிற நிலைமைகள் உருவாகி விட்டன. எனவே,

TRUTH ALONE TRIUMPHS

இந்த நிலைமைகள் எல்லாம் மீண்டும் அந்தப் போராட்டத்தை அதிகமாக வலுப் பெறுகிற அளவுக்கோ அல்லது இந்தப் போராட்டம் பரவுகிற நிலைமை ஏற்படுவதற்கோ அரசு அனுமதிப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆனால், அரசின் மூலம் வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் அணுகு முறை, எங்களுக்கு சரியாக இருக்கிறது, எப்போதும் கதவு திறந்தே இருக்கிறது என்று கதவை மூடாத நிலையில் அவர் பேசிக் கொண்டிருக்கிறாரே தவிர, பிரச்சினையைத் தீர்ப்பதற்காக கொஞ்சம் உடனடியாக அவர்களிடத்திலே எந்தப் பிரச்சினையாக இருந்தாலும் மனம் திறந்து கொஞ்சம் பேசி, அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதன் மூலமாக தமிழகத்திலே ஏற்பட்டிருக்கிற, இன்றைக்கு வருவாய்த் துறை என்று சொல்கிற ஒரு அத்தியாவசியமான துறையிலே இருக்கிற 15,000 ஊழியர்கள் என்று சொல்கிற நேரத்தில் எவ்வளவு பெரிய (குறுக்கீடு) அத்தியாவசியம் இல்லையா ? (குறுக்கீடு) எனவே, அந்த நிலையிலே அவர்களுடைய பிரச்சினையைத் தீர்க்க வேண்டும். ஆளுங் கட்சியிலே இருக்கிற நண்பர் சீனிவாசனுக்கு இது அத்தியாவசியம் இல்லையென்றாலும் கூட, நாட்டு மக்களுக்கு இது ஒரு அத்தியாவசியமான துறையாக இருக்கிறது. எனவே, அத்தியாவசியமான அந்தத் துறையிலே ஊழியர்கள் பணியாற்றுகிறார்கள். அதன் மூலமாக பல்வேறு பொது மக்கள் பயன் பெறுகிறார்கள். எனவே, அந்த வகையில் இந்தப் பிரச்சினையை விரைவில் இன்றே, தீர்ப்பதற்கு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

திரு. சோ. அழகர்சாமி: தலைவரவர்களே . . . . .

மாண்புமிகு பேரவை தலைவர்: ஒருவருக்கு ''Mention'' க்கு வாய்ப்புக் கொடுத்தால் எல்லோரும் பேசுவது எப்படி முறையாகும்? இப்படித்தான் போய்க் கடைசியில் கொஞ்சம் இறுக்கமாக இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுவிடுகிறது. ஏற்கெனவே பேசியாகி விட்டது. (குறுக்கீடு) அவர் விதி 78-லே கொடுத்திருக்கிறார், திரு. ரமணி அறையிலே கொடுத்திருக்கிறார், இது குறித்து அமைச்சரிடம் சொல்லப்பட்டிருக்கிறது, அதனாலே இரண்டு பேருக்கும் அனுமதி கொடுத்தேன். (குறுக்கீடு) இப்படி தொடர்ந்து எல்லோரும் விவாதத்திலே இறங்கினால் எப்படி அவையை நடத்த முடியும்? (குறுக்கீடு) எப்போது கொடுத்திருக்கிறீர்கள், சொல்லுங்கள். இது தொடர்பாகவா, என்ன எண் என்று சொல்லுங்கள்.

திரு. சோ. அழகர்சாமி : மூன்று நாளைக்கு முன்னாலே கொடுத்தேன். அரை மணி நேர விவாதம் அதிலே வேண்டும் என்பதற்காகக் கொடுத்தேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ''Mention''—க்கு ஒரு வாய்ப்புக் கொடுக்கப்பட்டது, எல்லோரும் பேசுவது என்று ஆரம்பித்தால் எப்படி அவையை நடத்த முடியும்? அமைச்சர் பதில் சொல்கிறேன் என்று சொல்லிவிட்டார். அமருங்கள்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும், வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பாக நாம் எல்லாம் வேதனைப்படுகின்ற அளவிற்கு, அனைத்துத் துறைகளுக்கும் தொல்லைகள் ஏற்படுகின்ற அளவிற்கு அந்த மறியல் நடைபெற்றுக் கொண்டியிருப்பது நமக்கெல்லாம் தெரியும். இதுகுறித்து அரசின் நிலை என்ன என்பதைப் பற்றி விளக்கமாக இன்றைய தின ஏடுகளில் விரிவாக வந்திருக்கின்ற அறிக்கைகளையும், அவை உறுப்பினர்கள் படித்திருக்கக்கூடும், என்று நான் நம்புகின்றேன். கதவு திறந்தே இருக்கிறது. எப்போதும் தாராளமாக, எனது வருவாய்த்துறையைச் சார்ந்த அன்பு நண்பர்கள் வரலாம், கலந்து பேசலாம். நீங்கள் அதற்கு ஏற்பாடு செய்து அவர்களோடு பேசுங்கள் என்று நமது மாண்புமிகு முதல்வர் அவர்கள் எனக்குக் கட்டளையும் இட்டிருக்கிறார்கள். மகிழ்ச்சியோடு நான் தெரிவிக்க விரும்புகின்றேன். இந்தத் துறையில் மறியலில் அல்லது வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுக் கொண்டியிருக்கின்ற அணிக்குத் தலைமை தாங்குகிற தலைவர்கள் அவர்களாகவே விருப்பம் தெரிவித்து, இன்று

10-10 மணி

11-30 மணிக்கு என்னை எனது அறையில் சந்திக்கிறார்கள் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்கிறேன். நிச்சயமாக எனக்கு நம்பிக்கை இருக்கிறது, இன்றோடு அந்தப் போராட்டம் கைவிடப்படும் என்று நான் நம்புகிறேன். அந்த அளவுக்கு அவர்களும் ஒத்துழைப்பார்கள். நான் மனம் விட்டுப் பேச வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். 30, 35 ஆண்டு காலமாக என்னைப் புரிந்த திரு. இராதா